**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Vinothkumar |
| P.W. | : 6 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 2 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாந்தோணி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2020ம் வருடம் நான் துங்காவி கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வந்த போது 18.12.2020ம் தேதி மாலை சுமார் 06.00 மணிக்கு கரிவரதராஜ பெருமாள் கோவில் நிலத்தில் பட்டா கேட்டு மக்கள் உட்கார்ந்திருந்ததாக தகவல் வந்தது. நானும், துங்காவி வருவாய் ஆய்வாளரும் அங்கு சென்றோம். அங்கு கோவில் செயல் அலுவலர், அந்த நிலத்தை குத்தகைக்கு எடுத்து ஓட்டி வரும் ராசப்பன் மற்றும் ஊர் பொதுமக்கள் இருந்தார்கள். செயல் அலுவலர் கோவில் நிலம் என்பதால் பட்டா கொடுக்க இயலாது என்று சொன்னார். அங்கு இருப்பவர்கள் யாரும் அதை கேட்கவில்லை. பட்டா கொடுக்காமல் இங்கிருந்து போகமுடியாது என்று மிரட்டினார்கள். ஆஜர் எதிரிகள் அங்கு இருந்தார்கள். செயல் அலுவலர் ராசப்பன் என்பவரிடம் அங்கு இருந்தவர்கள் விவரம் கேட்டார் அதற்கு ராசப்பன் அங்கிருந்தவர்கள் பெயர் சிவராஜ், செந்தில், மருதமுத்து,

காளீஸ்வரன், முருகேசன், ராமாத்தாள், சக்தி, ஸ்ரீதேவி என்று சொன்னார். செயல் அலுவலர் காவல் நிலையத்திற்கு புகார் தெரிவிப்பதற்கு சென்றுவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளின் பெயர், விவரங்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததால் ராசப்பன் என்பவர் செயல் அலுவலரிடம் கூறியதை வைத்து தற்போது பெயர்களை சொன்னேன் என்றால் சரிதான். கோவில் நிலத்தை குத்தகைக்கு எடுத்தால் மானாவரி பயிர் தான் பயிரிட வேண்டும் என்றால் சரிதான். குத்தகைக்கு எடுத்தவர் நீண்ட நாள் பயிரை சாகுபடி செய்ததால் அதற்கு எதிர்ப்பு தெரிவத்தவர்களின் பெயரை கூட்டமாக இருந்ததால் அவர் சொன்னார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:41:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 53/2024 |
| Name | : Rameshkumar |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.10.2025

**எதிரிகள் 2 முதல் 12 நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளராக வேலை செய்கிறேன். கடந்த 2020ம் வருடம் நான் துங்காவி கிராம வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்த போது 18.12.2020ம் தேதி மாலை 06.00 மணிக்கு துங்காவி கிராமம் மலையாண்டிபட்டிணத்தில் அறநிலையத் துறைக்கு சொந்தமான நிலத்தில் மக்கள் கூடி இருப்பதாக தகவல் வந்தது. கிராம நிர்வாக அலுவலர் வினோத் குமாருடன் நான் அங்கு சென்றேன். மக்கள் வீட்டு மனை பட்டா கேட்டுக் கொண்டு இருந்தார்கள். அறநிலையத் துறை செயல் அலுவலகர் அங்கு இருந்தார். செயல் அலுவலர் கோவில் நிலம் என்பதால் பட்டா கொடுக்க இயலாது என்று சொன்னார். அதற்கு அங்கிருந்தவர்கள் பட்டா கொடுத்து ஆக வேண்டும் சத்தம் போட்டார்கள். ராசப்பன் என்ற குத்தகைதாரர் அங்கு நிறைய பேர் இருந்ததால் செயல் அலுவலரிடம் யார் இருந்தார்கள் என்று தகவல் சொன்னார். காளீஸ்வரன், மருதமுத்து, சிவராஜ், செந்தில், முருகேசன், ராமாத்தாள்,

ஸ்ரீதேவி மற்றும் பலர் அங்கு இருப்பதாக சொன்னார். நிலத்தில் இருந்து வெளியேறுமாறு செயல் அலுவலர் சொன்னதை அங்கு இருந்தவர்கள் கேட்கவில்லை. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரிகளின் பெயர், விவரங்கள் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரியாது என்றால் சரிதான். கூட்டமாக இருந்ததால் ராசப்பன் என்பவர் செயல் அலுவலரிடம் கூறியதை வைத்து தற்போது பெயர்களை சொன்னேன் என்றால் சரிதான். கோவில் நிலத்தை குத்தகைக்கு எடுத்தால் மானாவரி பயிர் தான் பயிரிட வேண்டும் என்றால் சரிதான். குத்தகைக்கு எடுத்தவர் நீண்ட நாள் பயிரை சாகுபடி செய்ததால் அதற்கு எதிர்ப்பு தெரிவத்தவர்களின் பெயரை கூட்டமாக இருந்ததால் அவர் சொன்னார் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.10.10 16:41:16 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்